DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 93/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.இராமமூர்த்தி |
| Father's Name (or) Husband Name | : | த/பெ.சொர்ணமணி |
| Village | : | வெளியக்கோட்டை |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A2, A3 are present. A1, A2 are absent. U/s. 317 Cr.P.C petition filed and allowed. )

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 13.03.2024

---

**முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் சென்னையில் பத்திரிக்கையாளராக பணி செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும்.

2. 2019ம் வருடம் பொங்கலுக்கு சென்னையிலிருந்து எனது சொந்த ஊரான வெளியக்கோட்டைக்கு வந்திருந்தேன். 15.01.2019ம் தேதி எனது மனைவியின் ஊரான திருவெற்றியூருக்கு சென்றுவிட்டு இரவு 11.30 மணிக்கு நான் எனது இருசக்கர வாகனத்தில் வெளியக்கோட்டைக்கு திரும்ப வந்துகொண்டிருந்தேன்.

2. வரும் வழியில் A.R.மங்கலம் வழியாக வரும்போது எதிரி சாக்ரடீஸ் அவரது தம்பி மனைவி பிரியதர்ஷினி வீட்டில் இருந்து வெ்ளியே வந்து கையில் அருவாளுடன் என்னை பார்த்து தாயோழி உன்னை தாண்டா தேடிக்கொண்டிருந்தேன் என்று தாயோழி உன்னை கொல்லுரேண்டா ஓத்தா என்று தகாத வார்த்தைகளால் பேசினார்.

3. நான் அவரிடம ஒழுங்காக பேசுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் உனக்கு என்னடா மரியாதை என்று சொல்லிக்கொண்டே அருவாளை கொண்டே என்னை நோக்கி வந்தார் நான் எனது வாகனத்தை நிறுத்தினேன்.

4. அப்போது மாலதி, கார்மேகம், எமர்சனன் ஆகியோர்கள் வவந்து என்னை பிடித்துக்கொண்டார்கள். அப்போது எதிரி சாக்ரடிஸ் அருவாளின் கைப்பிடியை கொண்டு எனது முன்னந்தலையில் ஓங்கி அடித்தார் அதில் என்க்கு இரத்தக்காயம் ஏற்பட்டது.

5. நான் சத்தம் போட்டவுடன் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்தார்கள். அதை பார்த்த சிலபேர் எங்கள் வீட்டிற்கு தகவல் சொன்னவுடன் எனது தங்கையும் எனது மாமா ஈஸ்வரன் மற்றம் தமிழ்செல்வன் அந்த இடத்திற்கு வந்து என்னை அழைத்துக்கொண்டு திருவாடானை அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லும் வழியில் ஆர்.எஸ்.மங்கலம் காவல்

நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றோம்.

6. என்னிடம் காட்டப்படும் புகார் நன் கொடுத்தது தான் (**அந்த புகார்மனு அ.சா.ஆ.ண1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. வெளியக்கோட்டைக்கும் A.R மங்கலத்திற்கும் சுமார் ஒரு கிலோ மீட்டர் துாரம் இருக்கும். வெளியக்கோட்டைக்கும் திருவெற்றியூருக்கும் சுமார் ஆறு கிலோ மீட்டர் துாரம் இருக்கும்

2. வெளியக்கோட்டைக்கும் திருவெற்றியூருக்கும் இடைய A.R மங்கலம் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடமான ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலையத்திற்கும் சுமார் 20 கிலோ மீட்டர் துாரம் இருக்கும் என்றால் சரிதான்.

3. ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலையத்திலிருந்து ஆர்.எஸ்.மங்கலம் மருத்துவமைனக்கு சுமார் 2 கிலோ மீட்டா துாரம் இருக்கும் என்றால் தெரியாது. சாட்சி செல்லம்மாள் எனது உடன்பிறந்த தங்கை என்றால் சரிதான். சாட்சி தமிழ்செல்வன் எனது தாய்மாமா ஆவார். சாட்சி செல்வேந்திரன் எனது உடன் பிறந்து சகோதரர் ஆவார். சாட்சி ஈஸ்வரன் எனது தாய்மாமா ஆவார்.

4. 1வது எதிரி சாக்ரடீஸ்–ன் தகப்பனார் பெயர் போஸ் என்றால் சரிதான். போஸ்–ன் உடன்பிறந்தவர்கள் தான் தமிழ்செல்வன் மற்றும் ஈஸ்ரவன் என்றால் சரிதான். சாட்சி செல்லம்மாள் 1வது எதிரி சாக்ரடீஸை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

5. 1வது எதிரியும், செல்லம்மாளும் தற்போது ஒன்றாக வாழவில்லை என்றால்

சரிதான். தேவகோட்டை சார்பு நீதிமன்றத்தில் 1வது எதிரி சாக்ரடீஸ் சாட்சி செல்லம்மாள் பெயரில் விவகாரத்து HMOP 197/2018ல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

6. சாட்சி செல்லம்மாள் 1வது எதிரி மீது இந்நீதிமன்றத்தில் DVC 1/2018 வழக்கு தாக்கல் செய்தள்ளார் என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் C.C.No.13/2018 வழக்கில் இந்த வழக்கின் எதிரிகள் அனைவர் மீதும் சாட்சி செல்லம்மாள் வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

7. நான் அளித்த புகாரில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் தேதி குறிப்பிடப்பட்டிருந்தது. யார், யார் சம்பவ இடத்தில் இருந்து ஆர்.எஸ்.மங்கலம் சென்றீர்கள் என்றால் 2வது சாட்சி, 3வது சாட்சி ஆகியோர்கள் வந்தது மட்டும் தெரியும் மற்றவர்கள் வந்தது எனக்கு தெரியாது நான் மயக்கமாகி இருந்தேன்.

8. நான் மயக்கமாக இருந்ததால் புகாரை எனது மாமா கொடுத்தார். என்னை முதலில் யார் தாக்கினார்கள் என்றால் 1வது எதிரி என்னை முதலில் அடித்தார். நான் முதல் அடியிலேயே நான் மயக்கமாகிவிட்டேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் யார், யார் வீடுகள் உள்ளது என்று எனக்கு தெரியாது.

9. நான் பிறந்து ஊர் வெளியக்கோட்டை ஆகும். A.R.மங்கலத்தில் உள்ளவர்கள் எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் மற்றும் உறவினர்கள் என்றால் சரிதான். அதனால் A.R.மங்கலத்தை பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான்.

10. 4வது எதிரி கார்மேகம் அவர் வீட்டிற்கு மேற்கே புஷ்பராணி வீடு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. A.R.மங்கலத்தை ஆதவன் எனக்கு என்ன உறவு என்றால் நேருவை தெரியும் ஆனால் ஆதவன் நேருவை தெரியாது. ஆதவர்

நேரு வீடு புஷ்பராணி வீட்டிற்கு அடுத்து மேல்புறம் என்றால் எனக்கு தெரியாது.

11. எனக்கு தலையில் 2019ம் வருடம் இராமநாதபுரம் மருத்துவமனையில் ஒரு ஆப்ரேஷன் நடைபெற்றது. எனக்கு முதலில் தலையில் அடிபட்டதில் எனக்கு நிறைய ரத்தம் வந்தது என்றால் சரிதான்.

12. நான் சம்பவத்தன்று என்ன கலர் உடை அணிந்திருந்திர்கள் என்றால் ஞாபகம் இல்லை. அந்த ஆடைகளில் ரத்தக்கறை படிந்திருந்தது என்றால் சரிதான். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியாது என்றால் ஓட்ட தெரியும்.

13. சம்பவ இடத்தில் இருந்து நான் கூப்பிட்டால் எனது தங்கை மற்றும் மாமா ஆகியோர்கள் காதில் விழாது என்றால் விழாது. சம்பவ சமயத்தில் எனது மாமனார், மாமியார் ஆகியோர்கள் உயிரோடு இருந்தார்களா என்றால் உயிரோடு இருந்தார்கள் தற்போது உயிரோடு இல்லை. எப்போது இறந்தார்கள் என்ற தேதி ஞாபகம் இல்லை. Death Ceritficate இருக்கிறதா என்றால் இருக்கும்

14. எங்கள் சமூகத்தில் மாப்பிள்ளை தான் பெண் வீட்டாரோடு சென்று விடுவார்கள் என்றால் சரிதான். பெண்ணுக்கு தான் சொத்துக்களுக்கான உரிமை உண்டு என்றால் சரிதான். இந்த சம்பவ சமயத்தில் எனது மாமனார், மாமியார் உயிரோடு இல்லை என்றால் சம்பவத்தன்று மாமனார் உயிரோடு இருந்தார்.

15. எனது மாமியார் மற்றும் மாமனார் இருவருமே உயிரோடு இல்லை என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் வெளியக்கோட்டையிலிருந்து நான் திருவெற்றியூர் செல்ல வேண்டிய அவசியம்

இல்லை என்றால் சரியல்ல.

16. திருவெற்றியூருக்கு நான் சென்னையிலிருந்து வரும்போது நேரடியாக சென்றுவிட்டேன். வெளியக்கோட்டையல் சாட்சிகள் அனைவரும் ஒன்றாக தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். திருவெற்றியூரில் எனது மனைவிக்கு சொந்தமான வீடு உள்ளது என்றால் சரிதான். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளது.

17. எனது குழந்தைகள் இருவரையும், எனது மனைவியையும் அழைத்துக் கொண்டு தான் திருவெற்றியூர் சென்றேன் என்றால் சரிதான். நான் பொங்கலுக்கு திருவெற்றியூருக்கு வருகிறேன் என்ற தகவலை யாரிடம் சொன்னீர்ள் என்றால் நான் யாரிடமும் தகவல் சொல்லவில்லை.

18. சம்பவ இடத்தில் இருந்து ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலையத்தற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் எனக்கு தெரியாது. திருவாடானை அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு வந்தோம் என்றால் இரத்தம் வடிய, வடிய மயக்கத்தில் இருந்ததால் எத்தனை மணி என்று ஞாபகம் இல்லை.

19. நான் திருவாடானை அரசு மருத்துவமனையில் முதுலுதவி செய்துவிட்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தேன். எனக்கு எந்தவிதமான அடியோ, காயமோ இல்லை என்றும் நான் தான் 1வது எதிரியை அடித்து C.C.No.395/2022 வழக்கு பதிவு செய்யப்பட்டு நடந்து வருகிறது என்று' அந்த வழக்கில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக இவ்வழக்கில் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

20. எதிரிகள் மீதான முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள்

மீது பொய்யாக புகார் அளித்து அதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2வது சாட்சி செல்லம்மாள் ஏற்கனவே 1வது எதிரி மீது திருவாடானை காவல் நிலையத்தில் குற்ற எண். 8/2017 ல் கிரிமினல் வழக்கு தொடர்ந்து அதில் 1வது எதிரி விடுதலை செய்யப்பட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

21. எப்போதும் நடக்காத விஷயங்களை கூறி எதிரிகள் மீது புகார் அளிப்பதே வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.